**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 152 of 2024

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : ரமேஷ்

Father's Name : ரத்தினசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th **day of April** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் திண்டுக்கல் மாவட்டம் ஆண்டி நாயக்கன் வலசு கோட்ட துறையில் குடியிருந்து கொண்டு லாரி டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இருந்த ரத்தினசாமி எனது தந்தை. கடந்த 11.1.2018 ஆம் தேதி கோவை மாவட்டம் மஞ்சுபுரத்தில் உள்ள எனது மாமா மகள் சீருக்கு எனது அப்பா மற்றும் அம்மா மற்றும் நான் எனது மனைவியாக குடும்பத்திடம் கோவை வந்திருந்தோம். பின்னர் எனது அப்பா சூப்பர் ஸ்ப்ளெண்டர் இருசக்கர வாகனத்தில் மேற்படி விசேஷத்திற்கு வந்திருந்தார். அன்று மாலை சீர் வீட்டில் இருந்த பொழுது எனது மாமா செல்வராஜ் என்கிற ராசமுத்து விசேஷத்திற்கு வருவதற்காக காத்திருக்கும் தகவலை தெரிந்து எனது அப்பா மேற்படி இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு செஞ்சேரிபுதூர் எனது மாமாவை அழைத்து வர சென்றார். பின்னர் மாலை 06:45 மணி அளவில் எனது அப்பா செல்போனில் இருந்து என்னுடைய

நம்பருக்கு யாரோ ஒருவர் போன் செய்து மேற்படி தர்மராஜ் தோட்டம் அருகே உள்ள வளைவில் விபத்து ஏற்பட்டு கீழே விழுந்து கிடப்பதாக தகவலின் பெயரில் நானும் எனது உறவினரும் சம்பவ இடம் சென்று பார்த்த பொழுது எனது அப்பா மற்றும் எனது மாமா செல்வராஜ் என்கிற ராசமுத்து இருவரும் ரத்தக்காயங்களுடன் விழுந்து கிடந்தார்கள். அவர்களுக்கு அருகில் இருசக்கர வாகனமும் இருந்தது. நான் அவர்களைப் பார்த்த பொழுது இருவரும் சுய நினைவு இல்லாமல் இருந்தார்கள். பின்னர் சம்பவ இடத்திலிருந்து இருவரையும் எனது கார் மூலமாக உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் எனது தந்தையின் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் மேல் சிகிச்சைக்காக வேறு பெரிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு கூறினார்கள். ஆகவே நாங்கள் எங்களது தந்தையை பழனியில் உள்ள பிரியா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக அனுமதித்தோம். எனது தந்தை அங்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் இருந்தார். பின்னர் விபத்து குறித்து நெகமம் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி போலீசார் சம்பவம் குறித்து நேரில் வந்து விசாரித்தார்கள். பின்னர் போலீசார் உடல்நிலை எனது தந்தைக்கு சரியானவுடன் நேரடியாக காவல் நிலையம் வந்து புகார் அளிக்குமாறு கூறிவிட்டு சென்றார்கள்.

2. பின்னர் மருத்துவமனையில் எனது தந்தை தொடர்ச்சியில் இருந்த பொழுது இரண்டு நாட்கள் கழித்து நெஞ்சுவலி ஏற்பட்டது. பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக பழனி வேல் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். எனது தந்தை இரண்டு மணி நேரம் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் இருந்தார். அங்கு போதிய வசதிகள் இல்லாததால் எனது தந்தையை பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்க சென்ற பொழுது மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர்கள் எனது தந்தை வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தார்கள். பின்னர் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் கட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது போலீசார் என்னை விசாரித்தார்கள். எனது தந்தையின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட பொழுது உடன் இருந்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்பொழுது முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை போலீசார் புகார் அளித்த பொழுதும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மூன்று நாட்கள் கால தாமதமாகத் தான் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தை சிகிச்சையில் இருந்ததால் அவரை நான் பார்த்துக் கொண்டேன். ஆகவே புகார் என்னால் உடனடியாக கொடுக்க இயலவில்லை. எனது அப்பா சரியாக வாகனத்தை பிடிக்காமல் சென்று கீழே விழுந்ததில் நிலை தடுமாறி எதிரியும் கீழே விழுந்து இருவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது தந்தை சரியாக உட்கார்ந்து பயணம் செய்திருந்தால் விபத்து தவிர்த்து இருக்கலாம் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**